# கலிமடல்

பதிப்பு
ஐ. சிவகுமார் எம்.ஏ.,

நெறியாளர்
முனைவர். ய.மணிகண்டன்
பேராசிரியர்

T.7116

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
மே 2006

# கலிமடல்

பதிப்பு

ஜ. சிவகுமார்

நெறியாளர்

ய. மணிகண்டன்

விரிவுரையாளர்

தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

மெரினா வளாகம், சென்னை – 600 005.

மே – 2006

# நெறியாளர் சான்றிதழ்

**முனைவர். ய. மணிகண்டன்,**
விரிவுரையாளர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை – 600 005.

சென்னைப் பல்கலைக் கழக, சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் பேற்றிற்காக 2005–2006ஆம் கல்வியாண்டில் "கலிமடல்' எனும் தலைப்பில் உருவாக்கப்பட்டுள்ள இவ்வாய்வேடு என்னுடைய மேற்பார்வையின் கீழ் ஆய்வாளர் ***ஐ.சிவகுமாரின்*** சொந்த முயற்சியில் உருவாக்கப்பட்டுள்ளது என்று சான்றளிக்கிறேன்.

நாள்:

இடம் : சென்னை–5.

நெறியாளர்

விரிவுரையாளர்
**(ய. மணிகண்டன்)**

# பதிப்பாளர் உறுதிமொழி

**ஜ. சிவகுமார்**
முதுகலை இரண்டாம் ஆண்டு,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை – 600 005.

சென்னைப் பல்கலைக் கழக, சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் பேற்றிற்காக 2005–2006ஆம் கல்வியாண்டில் **“கலிமடல்”** எனும் தலைப்பில் உருவாக்கப்பட்டுள்ள இவ்வாய்வேடு எனது சொந்த முயற்சியில் உருவானது என்றும், வேறு எந்தப் பட்டத்திற்காகவும் இவ்வாய்வு அளிக்கப் பெறவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

நாள்: பதிப்பாளர்

இடம் : சென்னை–5.

**(ஜ. சிவகுமார்)**

# நன்றியுரை

சுவடியியலைக் கற்பித்து, சுவடியைப் பதிப்பிக்க வாய்ப்பளித்த சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு நன்றி உடையே எனது கல்வித் தேடலுக்கு புதுமுறை காட்டியும், புத்துணர்ச்சி ஊட்டி ஊக்கப்படுத்தும் தமிழ் இலக்கியத் துறைத்தலைவர் **பேரா. வீ. அ** அவர்களுக்கு எனது நன்றியைச் சமர்ப்பிக்கிறேன்.

சுவடியைப் பதிப்பிக்க அனைத்து நிலைகளிலும் நெறியாள் செய்து, இன்முகங்காட்டி சொல்லால் வளம்தந்து ஊக்குவித் உதவிகள் செய்து சுவடி தேர்ந்தெடுப்பிலிருந்து முடிப்பது வ நெறியாளுகை செய்த **பேரா. ய. மணிகண்டன்** அவர்களுக் எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேட்டபொழுதெல்லாம் சுவடியை எடுத்துத் தந்து உதவி கீழ்த்திசைச் சுவடி நூலகத்தாருக்கும், மடல் தொடர்பான பிரதிகளைய ஆய்வு நூல்களையும் இன்முகத்தோடு அளித்த மறைமலையடிக நூலகத்தாருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னைப் பெற்று இவ்வுலகைக் காண வைத்த எனது தாய், தந்தையருக்கும் என்னை சிறுவயது முதலே பரிவுடன் வளர்த்து ஆளாக்கும் எனது **பெரியதாய், தந்தையருக்கும்**, என்னைத் தனது தம்பியாக பாவித்து கண்டிப்பதோடு பல சின்னஞ்சிறு உதவிகள் புரியும் எனது **தங்கைக்கும்** ஆற்றொணாத நன்றியுடையேன்.

கணிப்பொறி அச்சு செய்து கொடுத்த விஜய் ஜெராக்ஸைச் சார்ந்த **ரா. ஜெயந்தி** அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(ஜ. *சிவகுமார்*)**

# பதிப்புரை

அமிழ்தினும் இனிய தமிழ் மொழியில் 96 வகைச் சிற்றிலக்கியங்கள் காணப்படுகின்றன. அவை தாம் எழுந்த காலத்தில் வாழ்ந்த மக்களின் அகப்புற வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாய்த் திகழ்கின்றன. அவற்றுள் கலம்பகம், பிள்ளைத்தமிழ், உலா, தூது, சதகம், அந்தாதி, பரணி, மாலை, கோவை, மடல் ஆகியவை குறிப்பிடத்தக்க சிற்றிலக்கியங்களாகும். தமிழ் இலக்கியப் போக்கில் அந்தந்தக் காலக்கட்டத்திற்கேற்ப இலக்கிய வகைகள் தோன்றிச் செழிப்புற்றன; சில வீழ்ந்துவிட்டன.

சங்க அக இலக்கியங்களில் காணும் மடல், பிற்காலத்தில் கோவை இலக்கியத்தில் ஒரு விரிந்த துறையாக வளர்ந்து இடம் பெற்றது; பக்தி இலக்கியம் எழத் தொடங்கிய காலகட்டத்தில் இறைவனை நாயகனாகவும், தன்னை நாயகியாகவும் பாவனை செய்து பாடும் முறையில் பாடல்கள் உருவாகத் தொடங்கிய நிலையில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் மடல் இலக்கியமாக உருப்பெற்றது. வைணவத்தைச் சார்ந்த திருமங்கையாழ்வார் இயற்றியருளிய இரண்டு மடல் இலக்கியங்களும் முதலில் எழுந்த மடல் இலக்கியங்கள் என்னும் பெருமை பெறுகின்றன. இவ்விரண்டிலும் நாயகி மடலூரத் துணிவதாக அமைந்திருப்பது சிந்திக்கத்தக்கது.

இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இடை காலத்தில் பாடப்பெற்ற மடல் இலக்கியம் கி.பி. 15–ஆம் நூற்றாண்டு முத அரசாட்சி புரிபவரையும், சமீன்தார்களையும் பலபடப்பாடிப் பொரு பெறுவதையே நோக்கமாகக் கொண்டதாக மாறிய நிலையையும் இலக்கி வரலாறு தெளிவாக உணர்த்தி நிற்கிறது.

## மடல் - சொல்லும் பொருளும்

'மடல்' என்னும் சொல் – பனை முதலியவற்றின் ஏடு; பனங்ககருக் பனங்கருக்காற் குதிரை போல் – செய்த ஊர்தி; பூவிதழ்; கிளை; கண்ணின திருநீறும் சந்தனமும் வைக்கும் கலம்; சோளக்கதிர் முதலியவற்றி மேலுறை; தோண்மேலிடம், ஆயுதவலகு; கை ஏற்றக்கழி; சிறுவாய்க்க எனப் பல பொருள் உணர்த்தி நிற்கிறது. மடல் என்ற சொல்லாட்சியை தொல்காப்பியம், சங்க இலக்கியம் முதற்கொண்டு ஆண்டுவந்திருப்பதன இலக்கண இலக்கிய வழக்குகள் உணர்த்துகின்றன.

## மடல் ஏற்றமும் மடற் கூற்றும்

பனை மடல்களால் ஆன குதிரையின் மீதேறி, தான் விரும் நங்கையின் உருவந் தீட்டப்பெற்ற கிழியைக் கையிலேந்தி ஊரறிய வ வந்து, அவள் பெயரைச் சொல்லிப் புலம்பும் நிலையே மடல் ஏற்றம்; இவ்வ

மடலேறித் துன்புறுவதைக் கூறாமல் தலைவன் மடலேற முயல்வதாகக் கூறுவது மடற்கூற்று எனப்பட்டது.

பெருந்திணைக்கு மடலேற்றமும், அன்பின் ஐந்திணைக்கு மடற்கூற்றும் உரியவை எனக் காட்டுவர் தொல்காப்பியர்.

> "ஏறியமடற் றிறம் இளமை தீர்திறம்
> தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
> மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
> செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே"

என்னும் நூற்பாவில் மடலேறுதல் பெருந்திணைக்கு உரியது என்பதைத் தொல்காப்பியர் புலப்படுத்துவர். இதனால், மடலேறுதலை இழிந்த செயலாக அக்காலச் சமுதாயத்தில் கருதினர் என்பது பெறப்படுகிறது. பழந்தமிழ் இலக்கியங்களில் இது அருகியே பயிற்சி பெற்றுள்ளமை இதை மேலும் அரண் செய்கிறது.

'மடன்மாக் கூறும் இடனுமா ருண்டே' என்று குறிப்பர் தொல்காப்பியர். இதனால் மடலேறுதல் உலகியல் வழக்கிலும் பயின்று வந்தமையை உணரலாம். இது உலகியல் வழக்காக இருந்த நிலையைக் கலித்தொகைப் பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன.

"வருந்தமா ஆர்ந்து மறுகின்கண் பாடத்
திருந்திழைக் கொத்த கிளவிகேட் டாங்கே
பொருந்தாதார் போர்வல் வழுதிக் கருந்திறை
போலக் கொடுத்தார் தமர்"

என்பதால் தலைவன் மாவூர்ந்து தமரிடமிருந்து தலைவியைப் பெ
நிலையை உணரலாம்.

மடலேறுதல் குறித்துப் பின்வருமாறும் சொல்லப்படுகின்றது.

"நிர்வாணமாகவே இளைஞன் மடலேறுவானாம். அத்து
அவனுடைய 'குதிரை'யைத் தெருவழியாக இழுத்தால், அவன் உடம்
பனங்கருக்கு அறுத்த இடத்தில் வீரியம் ஒழுகுமாம்; உடனே அவனு
அந்தப் பெண்ணை அலங்கரித்துக் கொடுப்பார்களாம். வீரியம் ஒழுகா
ரத்தம் ஒழுகினால் அவனைக் கொன்று விடுவார்களாம்". இக்கூற்று
இலக்கியச் சான்றுகள் கிடைக்கவில்லை.

## பெண்டில் மடலேறார்

மடலேறுதல் நாணமற்ற செயல் என்பதைப் பல பாடல்
உணர்த்துகின்றன.

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான"

எனத் தொல்காப்பியர் கூறியிருத்தலால் – நாணந் துறத்தலாகிய மடலேறுதல் மகளிர் மேற்கொள்வது பொலிவுடையது அல்ல என்பது அவர்தம் கருத்தாகப் பெறப்படுகிறது.

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப"

என்பதால் பெண்டிற்குரிய இன்றியமையா இயல்புகளில் ஒன்றாக நாணத்தைக் குறித்திருப்பதால் இது மேலும் வலுப்பெறுகிறது.

வள்ளுவப் பெருந்தகையின்,

"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்க தில்"

என்னும் குறட்பாவும் ஈண்டு சிந்தித்தற்குரியது.

"காமம் கவற்றக் கரும்பனை மடல்மா
ஊருவராடவர் என்றனர் புலவர்"

என்னும் பன்னிருபாட்டியல் நூற்பாவினால் ஆடவர் மடலேறுவர், பெண்டிர் ஏறார் என்பது பெறப்படுகிறது. ஆயின், இறைவனைத் தலைவனாக ஏற்கும்போது பெண்டிரும் மடல்மா ஏறுவர் என்பதையும் பன்னிருபாட்டியல் குறிப்பிடுகிறது.

> "மடன்மாப் பெண்டிரேறோ ரேறுவர்
> கடவுளர் தலைவராய்வருங் காலே"

என்னும் நூற்பா இதை உணர்த்தி நிற்கிறது.

திருவாய்மொழிப் பாசுரம் ஒன்றில் நம்மாழ்வார் மடலேறுதல் பற்றிக் குறிப்பிடுகிறார்.

> "நாணும் நிறையும் கவர்ந்தென்னை நன்னெஞ்சம் கூவிக்கொண்டு
> சேணுயர் வானத் திருக்கும் தேவ பிரான்றன்னை
> ஆணையென் தோழீ! உலகு தோறலர் தூற்றஆம்
> கோணைகள் செய்து குதிரி யாய்மட லூர்துமே"
> (குதிரி—நாணமற்றவள்)

இப்பாகத்திலும் நாயகி மடலேறுவதாகவே குறிக்கப்படுகிறது. 'கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கத்தில் அமைவதாகும் இது.

## மடல் வகைகள்

மடல் பற்றிய இலக்கியங்களில் மடல், உலாமடல் என்று இருவகை காணப்படுகிறது. மடல் என்பது வளமடல் எனவும் வழங்கப்படுகிறது. மேலும், கலிமடல், இன்ப மடல் என்ற பெயர்களாலும் குறிக்கப்படுகிறது.

## வளமடல்

பாட்டுடைத் தலைவனின் பெயரை எதுகையாக வைத்து, தனிச்சொல் இடம்பெறாத இன்னிசைக் கலிவெண்பாவினால் பாடப்படுவது வளமடல்.

> "அறம்பொருள் வீடெனும் அம்முக் கூற்றின்
> திறங்கடிந்து அரிவையர் திறத்துறும் இன்பம்
> பயன்எனக் கலிவெண் பாவால் தலைவனை
> பெயர்எது கையினில் பேசுதல் வளமடல்"

என்று இலக்கண விளக்கப் பாட்டியல் வளமடலுக்கு இலக்கணம் குறிக்கிறது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கில் இன்பமே சிறந்தது என வலியுறுத்திப் பாடுவது வளமடலாகும். நவநீதப் பாட்டியல், பன்னிரு பாட்டியல் பிரபந்த தீபம் ஆகியவையும் இவ்வாறே குறிப்பிடுகின்றன.

திருமங்கையாழ்வார் இயற்றியருளிய சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய இரண்டும் வளமடல் வகைக்கு எடுத்துக்காட்டாக நிற்கின்றன.

பக்தி இலக்கியம் பெருகத் தொடங்கிய இடைக்காலத்தில், ஆடவர் மடலேறுவதாக அமைத்துப் பாடப்பெற்ற மடல்துறையினை மகளிர் மடலேறுவதாக மாற்றிப் பாடியதோடு நில்லாமல்–அகப்பொருளில் அமைந்த மடல் துறையை ஒரு சிற்றிலக்கியமாகவும் உருவாக்கிவிட்டார் திருமங்கையாழ்வார். அம்முறையில் எழுந்த சிறியதிருமடல், பெரிய திருமடல் ஆகிய இரண்டுமே மடல் இலக்கிய வகையில் எழுந்த முதல் இலக்கியமாகும்.

"சீரானை, செங்க ணெடியானைத் தேன்துழாய்த்
தாரானை, தாமரைபோல் கண்ணானை எண்ணருஞ்சீர்
பேரா யிரமும் பிதற்றி, பெருந்தெருவே
ஊரார் இகழினும் ஊரா தொழியேன்நான்
வாரார்பூம் பெண்ணை மடல்"

எனவும்,

– மற்றிவைதான்

"உன்னியுலவா வுலகறிய வூர்வன்நான்
முன்னி முளைத்தெழுந் தோங்கி யொளிபரந்த
மன்னியபூம் பெண்ணை மடல்"

எனவும் நாயகி மடலூரத் துணிவதாக அமைந்த பாடற்பகுதிகள் சிந்திக்கத்தக்கன. மடல் இலக்கிய மரபு மாற்றம் பெறுவது இங்கே துவங்குகிறது எனலாம்.

## உலா மடல்

கனவில் கண்ட கன்னியைக் காமுற்று ஆண்மகன் அவளை அடையாவிடில் மடவேறுலேன் என்று உரைப்பதாக பாடப்பெறுவது உலாமடல்.

"கனவின் ஒருத்தியைக் கண்டு புணர்ந்தோன்
நனவின் அவள்பொருட் டாக, நானே
ஊர்வேன் மடல்என் றுரைப்பது உலாமடல்"

என்பது இலக்கண விளக்கம் தரும் இலக்கணம். இவ்வாறு பாடப்பெறும் கலிவெண்பாவில் தலைவனின் பெயர் எதுகையாக வைக்கப்படுவதில்லை என்பதும், இக்கலிவெண்பாவில் தனிச்சொல் உண்டு என்பதும் உணரத் தக்கது.

"உலாமடல் என்பது உரைத்திடில் தலைவன்
கனவில் ஓர்பெண்ணைக் கண்டு புணர்ந்தும்
மடவரல் பொருட்டு மடலூர்வன் என்பதைக்
கலிவெண் பாவால் கரைப்பது விதியே"

என்பது பிரபந்த தீபம் கூறும் உலாமடல் இலக்கணமாகும். உலா பிரபந்தத்தின் தன்மையும் மடல் பிரபந்தத்தின் தன்மையும் கலந்து உருவானது என்று குறிப்பிடலாம்.

ஏனைய பாட்டியல் நூல்கள் கலிவெண்பா என உரைக்க, முத்துவீரியம் முதலில் இன்னிசைக் கலிவெண்பா எனச் சிறப்பிக்கிறது. 'மடல் என்பது

உலாப் போல் வழங்கினும்', என்று தொன்னூல் விளக்கம் மடலை உலாவுடன் தொடர்புபடுத்தி உரைப்பதும் குறிப்பிடத்தக்கது. மடல்மா ஏறித் தலைமகன் வீதியில் செல்லுவது உலாவுடன் ஒப்பிடப்படுகிறது.

## பெயரமைவு

மடல் இலக்கிய வகையில் எழுந்த நூல்களின் பெயர் அமைவிலும் ஓர் ஒப்புமை இருப்பது புலனாகிறது. பாட்டுடைத் தலைவனின் பெயரைக் கொண்டதாகவே பெரும்பான்மையான மடல் இலக்கியங்கள் விளங்குகின்றன. சிறுபான்மை நூல்கள் மடல் வகையைப் பெயராகக் கொண்டு விளங்குகின்றன. (எ–டு) சித்திரமடல், உலாமடல், கலிமடல், பாட்டுடைத் தலைவனின் ஊர்ப் பெயரைக் கொண்டிலங்குவது திருச்செந்தூர் மடல்.

## முன்னோர் மொழியைப் போற்றுதல்

மடல் இலக்கியப் படைப்பாளிகள் தங்கள் காலத்திற்கு முன்னர் வாழ்ந்து இலக்கியம் படைத்தவர்களையும் அவர்தம் இலக்கியங்களையும் போற்றத் தவறவில்லை. தேவைப்படுமிடங்களிலெல்லாம் முன்னோர் மொழியையும் தம் நூல்களில் குறித்துச் செல்கின்றனர். முன்னோர் படைத்த இலக்கியத்தின் மீதுள்ள பற்று இதற்குக் காரணமாக இருப்பது உணரத்தக்கது.

மடல் இலக்கியங்கள் சிலவற்றில் திருக்குறள் கருத்து கையாளப்பட்டிருப்பது புலப்படுகின்றது. மடலூரத் துணிந்த தலைமகன் திருவள்ளுவர் மடலைப் பற்றிக் கூறிய குறட்பாவினைத் தன் நினைவுக்கு கொண்டுவந்து மடலூரத் துணிகிறான்:

"காமமுழ்ந்து கலங்கி வருந்தினார்க்
கேமமல்ல தில்லைவலி – ஆமெனவே
சொன்ன திருவள்ளுவரை தோத்திரம் செய்தேன் கருத்தில்
உன்னி மடலூர் தற்கொருமித்தேன்"

என்னும் வருணாகுலாதித்தன் மடல் வரிகள் இதை உணர்த்துகின்றன.

இதே போல் இந்நூலிலும்,

"கரிய கடலன்ன காம முழந்தும்
வரிநெடுங்கண் மாதர் மடலேறார்"

எனும் குறள் கருத்து இடம்பெறுகிறது. மேலும்,

"நெடுந லுளனொருவன் இன்றிலை என்னும்
பெருமை யறிந்தும்"

"கானா கனியிருப்ப காய்கவர்ந்து"

என சிற்சில இடங்களில் திருக்குறளை யொத்த வரிகளை இந்நூல் கொண்டிலங்குகிறது.

## தொகுப்புரை

சங்க இலக்கியங்களில் அகப்பொருள் துறையாகக் குறிக்கப் பெற்ற மடல், கலம்பகத்தில் **"தமை"** என்னும் உறுப்பின் பகுதியாக விளங்கி கோவை பிரபந்தத்தில் முழுத்துறையாக வளர்ச்சியடைந்து கி.பி. 9ஆம் நூற்றாண்டளவில் இலக்கியத் தகுதி பெற்றது. தலைமகன் மடலேறுதல் என்ற மரபு, தலைமகள் மடலேறத் துணிந்த நிலையில் மரபு மாற்றமும் ஏற்படலாயிற்று.

பெருவான் முதலாய்ப் பிறங்குகின்ற பேத
வுருவாய் அருவாய் உளபொருள்கட் கெல்லாங் 1

கருவா கியபெருமான் கண்ட நாட்டொட்டுப்
புரையார் புடவியிலும் பொன்னுலகத் துள்ளும் 2

அருநான் மறைநூலோ டாகமநூல் மற்றும்
உலரசான்ற நூலெல்லாம் ஓதுகின்ற தோரிற் 3

பொருணான்கே அந்நான்கும் பொய்மை யறுமெய்மை
தெரிவார் தெரியுங்காற் றீங்கொன்று மேவா 4

நிருபா திகமொன்றே நேரே தருமம்
பொருளா வதுமென்றும் பொன்றுப் பொருளே 5

இரியாத இன்பமே இன்பம்சென் றேயதற்கு
அரிதாய வீடும் அதுவேயாய் நின்று 6

உரையா குவவெல்லாம் ஒன்றுய்ய வின்ப
பெருமானை யல்லவோ பேதமா வேறே 7

பொருணாடி நின்று புலம்புவோர்க் கந்த
பரமானந் தத்தைப் பகரப் படுமே 8

திருவேதம் வெவ்வேறுச் செப்புகின்ற அந்தத்
தருமமும் இன்பந் தருமன்றே – அன்றே 9

பொருளும் அதன்பொருட்டே போன்றுத வீட்டின்
உருவும் அஃதே துமக்கேற வொத்தால் 10

நெருந லுளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யறிந்தும் பெறுதற் கரிய 11

வருமந்த இன்பா னுபவமே கழித்துத்
திரிகின்ற வென்கொலே தேரீர் தெளிந்தார் 12

பரவின்பம் ஐம்புலனும் ஆரப் பருகி
உருகு நதிதனை உணராதே யுண்மை 13

தெரியுந் தெரிபிலராச் செத்துப் போயங்கே
பிரமந் தனையடையப் பித்து பிதற்றிக் 14

கானா கனியிருப்பக் காய்கவர்ந்து கண்முன்
விரையார் விளக்கிருப்ப மின்னி தீக்காய்ந்து 15

கானா முயலைவிட்டுக் காக்கை பிற்போகி
நரையா அமுதிருப்ப நஞ்சுண்டு நாடா 16

தெருதீன்ற தென்பவரை யென்னகன் றென்று
திரிபவரை யானோ தெளிவிப்பென் செய்த 17

பெருமா தவத்தாலே பேதையர்க ளோடே
விரிவேதும் இல்லென விளையாடப் போன 18

தெருவின் கணேயொருவன் தேவா.திபருஞ்
சூரரும் தொழுதேத்த தூயமறை கண்ணாகும் 19

பாவ வருமாவம் பாவியேன் கேட்டுத்
தெரிவை யொருத்தியை யான்சென் றணைந்து 20

சீரார் அரவமிது என்கொலென்றேற் கவருங்
குரவன் கழலிறைஞ் சககோ லவளாய்ப் 21

போதென் றுரைசெய்ய யானுமுடன் சென்றிறைஞ்சிப்
பரவ நினையளவிற் பாவியேன் கண்ணீர் 22

சொரியும் உரைகுழறும் சூழ்கலையும் நெஞ்சும்
சரியும் வளைக்கழலுஞ் சாயலும் நாணும்போய் 23

அரிய வுயிரும் அவனதா யாக்கை
யுருபு திரியும் உரைப்ப தெவனோ 24

புரியும் வகையறியேன் பித்தேற் றியதுஞ்
சுராபுங்க வாமகுட சூளா மணியே 25

கரபங்க யங்குவித்து கண்ணீர் உகுமன்பர்
சிரவந்த மிரதூறி தித்துக்குஞ் செவ்வி 26

அரவிந்த நாண்மலரோ வள்ளு ரடியார்
பருகும் மருளுமப் பாவியே நெஞ்சும் 27

உருகும் படிகோவுல குய்யவோ வந்து
அருளுந் துணைக்கழலோ வம்பர மீதனறி 28

யிரவுந் தவிர்க்கு வெறிக்கு நிலவோ
திருவுடையோர் செங்கமலை வீற்றிருக்குஞ் செம்பொன்
29

வரையோ திருமார்போ வந்து பலவா
விரியும் இளநிலவோ வெண்ணகமோ முத்தித் 30

தருவோசெந் தாமரையோ சங்கோ தனது
கரிய நிறன்மாற்றுங் காரோ சுரபி 31

உருவக வாந்ததோ சார்ந்தவர் தம்முள்ளம்
வெருவு தறீரும் வகைமெய்யே அபைய 32

வரதம் அருளும் மலரோ வானோர்தம்
இருவினையும் வாங்கவோ இன்பமாந் தன்ன 33

துருவம் வரபெறவோ உச்சிமேல் வைக்கும்
இருகை மலரோ இருவரையோ முன்னே 34

அரிய தவமுடையார் ஆகம் பொருந்த
உரிய புயமோ ஒளிமணியோ முத்தி 35

நிரையோ எனதுநிலை கண்ட ரும்புந்
திருமுறுவ லோபாதஞ் சேர்ந்தார் பிறவிக் 36

கருமாற்றுங் காலமோ கன்னலோ பாகோ
ஒருமாற் றமேமலரும் ஒண்கமலப் போதோ 37

பெருநான் மறையின் பிறந்தகமோ செய்ய
மருவாருந் தொண்டையோ வையமெலா முண்ட 38

திருவமை மலரோயென் சிந்தை மனங்கொள்ளும்
குருவார் குமிழோ குழையோயென் குற்றம் 39

ஒருகாலுங் கேளா வுரைப்ப தெலாங்கேழ்க்குந்
திருவான செவ்வி செவிமலரோ சென்று 40

பொருமார்பே றுவுடம்போ பொன்றுமனில் லாத
திருவோ கெடுமென்று சென்றவர்கட் கெல்லாம் 41

உரையா டுபவோ எனுமுள் ளமும்பண்டை
விரகா னதுமொருங்கே மீளாத வண்ணம் 42

பருகா விடுகின்ற பங்கயமோ கண்ணோ
செருவார் சிலையோ திருப்புருவ மோசந் 43

திரபாகமோ தனது தெய்வக்கண் காண
உரியாற்குந் தோன்ற வொளித்திங் குதித்த 44

திருநுதலோ தானமது செய்தருவி விட்ட
வருவினையே னுள்ளமோ அலலோ முகிலோ 45

சரிகுழலோ ஓங்கு சுடரோ திருவா
பரணமோ பாதாதி கேசாந் தகமாக 46

அருளே அருளோ கையமோ மறையின்
பொருளோ வுரையிரந்த போதந்தி ரண்ட 47

வுருவோ எனவறியேன் உன்மத்த மாகிப்
பரவுந் திறனறியேன் பாவியேன் நிற்க 48

கரியுணவின் இன்கனி போல என்னைப்
பருக அறியாதே பண்டையே னாகக் 49

கருதியெனை வந்த காட்சிக் கினிய
குரவன் எழுந்தருட லுக்கும்பிட் டாயாகில் 50

அரிவை அகம்புகுதென் றன்னைமார் சொல்லித்
திரிய அறியேன் திகைப்பேறி நிற்பச் 51

சரிகுழலார் தம்முடைய ஆடகஞ் சேர்ஸகயால்
ஒருவரொ ருவரொழி யாமறம் பற்ற 52

வெருவி உளமயங்கி வீழ்ந்தேனை மீண்டும்
குரவன் பிறகே கொண்டு போகார்கள் 53

ஒருமனையிற் கொண்டு போயும் பரக்கரிய
திருவடியார் சேர்த்தார் தந்தசீ ரமவிசேர்த்தி 54

பரவரிய புண்ணியஞ் சேர்பாதோ தக்கதைச்
சொரியார் பனிநீர் சொரிந்ததெங் கோடி 55

திருவீ தியிற்பொடியைச் சேர்த்தார் செழுநீர்
விரையார் பனிதஞ்சேர் வெண்களபம் விம்மும் 56

வரையார் முலைமீதே மாறு மலப்பித்
திருமார்பிற் சேர்த்திய செங்கழுநீர் மாலை 57

சுருளார் குழன்மிசையே சூட்டார்கள் வேறே
ஒருமாலை சூட்டியிறைக் குள்ளுருகு மன்பர் 58

திரளோ டிருத்தாதே தெண்ணிலவின் வைத்துக்
கருமாற நாமெலாங் கண்காண வின்னே 59

வருகால் ஒழிய மலையக்கான மாறு
மொருசாள ரத்தருகே வோவா மலிட்டு 60

பெருமா னறிதன் னறிப்பே யேறி
நூறா யிரமாகச் செய்தார் களெல்லா 61

மெரிமே லிழுதா விருப்பதனைக் காணா
வரியார் மழைத்டங் கணம்மன் னயுந்தன்கை 62

முறையா விதுதணிக்க நேராக வில்லை
ஒருகோடி நேரவொரு நாட்கொருநாட் பெரிதா 63

வறிமயலும் பீற நிறன்பொய் முன்னை
உருவா னதும்வாரா வாகந்தா னுட்காப் 64

பரிவோடும் என்னைப் பயந்தருளிப் பாரமேன
மானா னதுவறியு மாதாரா தங்கட்கு 65

உரையாடி என்செய்கேன் என்றுளுக் கோரா
நிரையார் வளையார் நிமித்தங் குறிக்கட் 66

டருள்பே சினரா வணங்கி நின்று
வருதவர லாற்றிய வாமென்றூ மயலார் 67

நிரையாகக் கேட்டா ணிமித்தங் களெல்லாம்
வருமா நிமித்த மாயமன்னுங் குறிக்குக் 68

குருவார் குறியார் வலையமாங் கோப்பின்
கருவாகி கட்டிற்குக் கட்டாயங் கடவுள் 69

அருளா னதுக்கெல்லாம் ஆரருளா யுள்ள
பெருமா னிவராலே பேசப் படுமே 70

தெரியாமை யாவென்னிற சிந்தைநோய் கூர
ஒருநா ளுமென்கண் ணுறக்கத்து மென்வாய் 71

வருவாய் எனையாள வாரா யிமையோர்
பெருமா னெனக்கேட்டு பெண்ணே நீயுற்ற 72

வருமா லெனக்குரையாய் என்றுளுக் கன்னே
பெருவே தனைக்கிடனாம் பேதை யேனாகந் 73

தருவா யொழியத் தவிர்ப்பாய் நீயோ
வருமாயிற் கேளாய் மயலான வுங்கட் 74

டெரியா லறியுஞ் சிறுதெய் வமல்ல
விரிகாய் கதிர்ச்செல்வன் வெண்டிங்கள் பார்நீர் 75

எரிவளி வானிய மானனென் றெட்டும்
வருகாள் வருமெவனால் வந்ததெவ னாலிங்ஙன் 76

சரியாது நிற்குந்தா னோவானோர் தலத்தி
னராதி யெண்பத்து நான்கடுத்த நூறா 77

யிரமா வளவறேந்த யோனிபேத் ததார
சரமாய் சரமாய்த் தானென்று போலே 78

விரிவா மெவனாலிவ் வெவ்வே றுடம்பு
பரியாப் பாமெவ னாற்பாதம் எவனறா 79

சரியாது நிற்கின்ற தானாதி யாராற
கானா னதுவழங்கும் கற்றதெலாம் வாக்கும் 80

உரையா டுவதெவனால் உண்கின்ற இந்த
விரதா திகளெல்லாம் எவரால் அறியும் 81

புரையார் செவியும் புரைதீர் உலகின்
உரையாடு வதுணர்வ தாரால் வருவது 82

கருமா மலர்க்கண்ணுங் காண்ப தெவனால்
உருவாம் உடம்பெவனால் ஊற்றியுந் துண்ட 83

மருவா மன்னறிவ தாரான மனாதி
கரண மெவனாற் கருதற் கறியும் 84

அருவு பிரானாகி யாரால் வழங்கும்
அருவவுயி ரென்றுனா லாரப்பண் ணுமெல்லா 85

மாண முறினும் அரியான் எவனிந்
திரனெறி தென்புலத்தார் கோமா னிருதி 86

வருணன் வலிபெரிய வாய்க்கு போனெறி
நிறவீச னென்னு மெண்மலரும் யாவ ·87

னொருவன் பணியின் உலகத்திற் தத்தங்
கருமஞ் செயாதிற பாகாயங் களெல்லாம் 88

பிரம னெவனாற் பிறப்பிக்கும் பின்னை
அரியு மெவனால் அழிக்குந் தொழிலுக் 89

குரியன் உருத்திர னுமாரால் ஒழிக்குந்
திரிய வெவனாற் செனிக்குஞ் செகத்தெவ் 90

வுருவ மவனாய் ஒருவடிவு கண்ணிற்
றெரியும் வகையின்றிச் சிந்தனைக்கு மெட்டற் 91

கரிய பொருளென்று அருமறை களோதும்
பரமனவன் இப்பரி சனித்திங் கென்ன 92

துருவு கவந்தான்என் றோதினேன் ஓதக்
கருகி விழிச்சிவந்து காற்ற றனமாய் 93

பெரிசறி வாகிநீ பிஞ்சிற் பழுத்த
வுரைகள் பகரல் ஒழிகென்று ருக்கி 94

மருவலா கேட்டு வடுவுரைக் கமங்காய்
உருவி ஒருவனை நீயுள்ளப் படுத்தல் 95

கருமமல வென்று கற்பித்துக் கண்டாள்
அருவினையென் றன்வரகதி னல்லாமை யாலே96

பரிபவித்து மணமேற் பரனென் றொருவன்
றிரிதந்தென் பாவையைச் சிந்தைநோய் செய்தங்கு 97

உருவங் கெடுத்தா னென்றோ வாதரற்றப்
பரமனறி றன்றியாப் பாவையர் கணின்று 98

பொருளொ னறிலவென் பாரபுந்தியே யென்பாற்
ஒருசீவ னுன்டென் பாருளே பிறவிக் 99

கருவென்ப ரகத்தாவுண் டென்றுரைப்பாப் சத்தப்
பிரமமென வுரைப்பார் பேயே யென்பார் 100

ஒருபொரு ளேயென பாருபையமே யென்பார்
பரவை யுலகம் படைத்தற் குரிய 101

பிரமனிறை யென்பார் பீரவண்ணத் தந்த
வுரகன் மிசையன் அந்த யோகத் 102

துறங்கு கரியமுகில் காக்கின்றா னென்பார்
அரனிவ் வுலக மழிப்பா னிவனே 103

திரியவமைப் பானுமென் றிசைப்பார் சித்திக்
கருகார் காளனா னாரே யென்பார் 104

உருவி ஒருவனை நீயுள்ளப் படுத்தல்
தரும்நெறிக் காசு கதமாந் தன்மை 105

யரசினி ழலளித்த வாதியே யென்பார்
உருவிலனென் பாருரு வுடையா னென்பார் 106

பரசத்தி யென்பார் பரமமாம் என்பர்
உருவமா மெலோ ருலகுறையு மென்பர் 107

அருவை உருவத்தே அர்ச்சிக்க வென்பார்
இரமித்த சபையிசைக் கின்ற தென்பார் 108

கருமத்தை நன்றேன் பார்காய்க் கிலேசம்
பெருகப் பிரானா யாமாதிப் பெலத்தான் 109

இருபத்து மூவர் தாரந்தன் னினானற்
வெரியைக் கொடுப்போய் இரவிமண் டலத்தை 110

உருவிச் சசிமண்டலம் உருகதி யோவா
திரிதிக்கு மாரமிரதந் தெண்முத்தஞ் செய்வித்து 111

உருமத்திற் கொத்ததுவே துல்லியமென் றோதி
யிரதிப் பாரிப் புருடனிவ் வுடம்பினுள்ளே 112

புருமத்தி யத்திற் புரிகின்ற போதிற்
கிரிவத் திலேகனவிற் கேட்டிடத் தினாகி 113

மருமத் திலேயாய் வடிவற்று நின்ற
துரியத்து நாபி துடங்கியோர் நாலு 114

விரலுக்கு மேலாதி வீற்றிருக்கு மென்பார்
கருமத்தி னெண்மடங்கு காயத்தே நின்று 115

நிருமித்து யோகநெறி கூறில் அங்ஙனம்
பிரமித்து நானா பிதற்றிப் பிணங்கி 116

யொருவர்க் கொருவர் ஒழியா வில்லிற்
குருவிக் குழாம்போல கூப்பிட்டார் கொண்டு 117

நிரூபிக்கு நெஞ்சை நெகவிருந்து தம்மில்
ஒருமித்தாற் கித்தனையு மொன்றுகுந் தன்மை 118

தெரிசிக்குங் கண்ணிலார் தித்துக்குஞ் சொல்லான்
மருவுற்ற பூம்பொழில்சூழ் வாதவூர் வள்ளல் 119

கருவுற்ற வந்த கவலைமையுங் கைகொண்டு
ஒருசொற்றெளி துளித்ததோர் விரகு முன்னிப் 120

பொருமிப் பொருமிப் புகலுங் கானெஞ்சின்
விரகற்ற மையாள் விழியருவி நின்று 121

சொரியச் சொரியத் துயர்தீரக் கேட்குடாற்
பொருளுண ராரும் புளகித்து நெஞ்ச 122

முருக வுருக வுலகுய்ய வோதுந்
திருவா சகமென்னுந் தேறல் செவியாற் 123

பருகா வுருகா பதையா கண்ணீர்
சொரியா உரைகுழறு சொல்லும் பொருளும் 124

விரவாப் பொருளான் மெய்யின்ப வேடங்
கணொடும் நிதியாகிக் கண்காண வந்த 125

பரிசேது நெஞ்சிற் படாதார் பரனே
குருகூர் சடகோப னென்றொரு பேர்கொண்டிங் 126

கருநான் மறையா யிரஞ்சிரமும் ஓரோர்
திருவாய் மொழியாகச் செந்தமிழ் ஆற்றென்றிக்

கிருணீக்கி மறந்துவே யின்பமா கின்ற
பரலோக மாகப் பரங்கருணை யாலே

தருமார மிந்தலைத் தாகந் தணியப்
பருகாச் செவியுடையார் பங்கயக்கண் மாலால்

அரனால் அயனால் அறியாதார் அன்பால்
வருமாற்றி யாதார் மானிடம் மாயவந்த

திருமேனி யின்தன்மை தேராதார் நேரா
அருளே வடிவென்ற றியாதார் அன்பின்

கிரமா கிரமங்கள் கேளாதார் கேட்டு
மரனான் கண்ணுடையார் வஞ்சநெஞ் சுடையார்

உருகா உளனுடை யாருனா முடம்பின்
வருநோய் அறியாதார் வன்னிபோ லின்னம் 133

ஒருதாய் முகங்காண வுட்காதார் உள்ள
பரமா யவையுணரார் பாழிற் கிறைத்துத் 134

திரிவா ரிவர்சொல்லத் தீவினையே னாற்றேன்
அறியே னென்னுள்ளே தலைமோதி யார்க்கீது · 135

உரையாடு வனென்று உழற்றுவென் தன்னை
திருமாலும் நான்முகனுஞ் செஞ்சடையோ னுந்தேர் 136

பொருளாகி யின்றளவும் புத்தேள் இரானும்
அருவோ வுருவோவென்று உய்தற் கரிய 137

பொருளையோ வாகத்தாற் புல்லுங் காலை
கருவினாள் என்றுதங்கை யார்த்துக் கண்ட 138

தெரிவைமார் எல்லாஞ் சிரித்தார் சிரித்தென்
பொருமா லகரிவெட்டும் பூழ்வெட்டும் போனார் 139

உரியார் பெறுவார் ஒழிந்தார் பெற்றார்
நரிமா வுளங்கிழித்த வம்பினி நன்றே 140

அரிமாப் பிழைப்பெய்த கொலன்று றைந்தார்
பெரியோர் சிலர்முன்னே பேயேன் பெறுதற்கு 141

அரிதே எனினுமவன் ஆக மின்றி
மருவேன் உன்றன் மணிவாக்கிற் கன்றி 142

உருகேன் உரையேன் என்னை யாருடையான்
திருநாம மல்லது சீரெய்தாச் செந்தா 143

மரையே தளிரே வனஞ்சேர் வையங்
கரைசேர வந்த கழற்போ தொழியச் 144

சிரமீது சேரேன் எனச்சிந்தை செய்தென்
பெருமானைப் புல்லப் பெறுதற் கிடனாகும் 145

ஒருபாவை யன்றே வுடையான் புகழே
பாவா தொழியினர்ப் பாழுரி னோரிக் 146

குரலாகு மென்குரவன் கோலமுழு துங்கண்
டுறுகா வொழியு மெலூன் சும்பு 147

மாறுங் குரையார் குமிழியென்றோ தானோக்கற்
திருநாமங் கேளா தொழியிற் செவியும் 148

புரையார் குறும்பிவாழ் பொந்தன்றே பொன்னாம்
உருகார் மலர்ப்பாதம் ஒந்துண்ணு மூக்குந் 149

துரிசான செற்புச் சொரிதுவளை யேயன்றே
பரமாக நாதன் பணியேசெய் தேற 150

கானான் துவழங்காக் காட்டகத்துக் கள்ளி
மானார்க வையன்றே வானவர்க் குஞ்சார் 151

வரியானை யிங்ஙன வாவுற்று தானின்
றெரிவாய் மெழுகொத் திரவும் பகலுங் 152

கரையா வெழுவெனைக் கல்லார் முல்லை
மரைமாவ சோகென்னும் வன்கணைக் களைந்தும் 153

ஒருகா லெயென்கா றோட்டுச் சியளவும்
பொரமார னாகமெல்லாம் புண்ணாக நின்று 154

சரமாரி தூவத் தமிழ்க்குன் றினின்றும்
வருகா லெரிவீச மாமதியு மென்மேல் 155

எரியா வெறிப்பவிரும் பெண்ணை யன்றிறு
குரலா லுமாயர் குழலாலுங் கொம்பின் 156

வரியார் குழலா லுமாயவென்ன மாயாப்
பெருமான் திருமார் பெறநினைத்த என்பொன் 157

றொருகால் ஒழியா மல்ஓவாது அரற்றுங்
திரைவா யினெண்மடங்கு செரியார் தங்கள் 158

பெருவா யினானொறுப் பப்பெற்று னக்கே
யிரையா யிருப்பெனி தெல்லாமிறை வாக 159

குரையாடி னாவென்னவோர் துணையுங் காணேன்
பிரியா என்நெஞ்சும் பெருமான்தன் பின்போய் 160

வருமாற் றியாது மற்றுரை நோவேன்
கிரிசூழ் உலகத்திற் கெட்டார்க்கு நட்டார் 161

ஒருபூதம் இல்லையென உண்மையா ஓதும்
பாவை வழக்கும் பழுதாகு தன்றே 162

கரிய கடலன்ன காமம் உழந்து
வரிநெடுங்கண் மாதர் மடலேறா ரென்னும் 163

உரையை எமக்கொழிய ஓதும் உமையாம்
வரையரையன் பாவை மதுவுண்டு உண்டார் 164

கரிய குழல்வேணிக் கட்டிக் கடினம்
அரவுரியைத் தான்புனைந்து மாதிரங்கள் நான்கும் 165

எரிவளாவீ யக்கியிரு விசும்பி னேகும்
பருதிசுட நின்றும் பாசடையே யன்றிச் 166

சருகு மயிலாட வஞ்செய்து சாவா
வொருவ னுடம்பினொரு பாகங் கொண்ட 167

பெருமை பிறர்க்குரைக்கும் பெற்றியோ பின்னும்
மரசொழிய வெங்கான் அடைவதற்கோ ரன்னை 168

வரநிறப் பத்தாதை பான்மைந்தாக் கதுவே
தருமமெனச் சென்ற தாசாகி பின்னே 169

திரியு மருங்கற பிற்சீதையே காம
சரிதை நிலைநிறுத்தித் தந்தா டகவர் 170

மிருடிக ளோரெழுவர் இன்பம் பயக்க
விரதம் புரிந்து லகின்மே நாளென்றும் 171

பிரிவின்றித் தன்பதியைப் பின்றொடர்ந்து நின்ற
வருமந்த கற்பினரும் பதியை நேரே 172

தரம்வந்த வருண்டே இத்தன்மை சார
வரனன்றே வானகத்தும் மண்ணகத்து மன்னும் 173

விரதங்கள் பூர்குழலார் வேண்டுவதும் வேறு
முருகுங் கமழ்குழலார் முன்செய்தார் செய்த 174

துரைதந் திடுங்கால் ஒருதோ டமுள்ள
பொருளிங் குணராதே பொய்யிற் புலம்பி 175

நிரையம் புகாமே நிலன்மிசையே முத்திக்
கரைகண் டிடத்தன் கழற்போ தளித்த 176

குரவன் தனையிக் குரம்பைத் துவகை
உரையொன் றின்மாற்றி யுள்ளன்னை நல்கும் 177

விரகன் தனையென்னை வேதித் தெனக்கே
யிரதம் பிரப்பித்த வின்ன மிரதை 178

தரமின்றி வாழ்வித்த தாளானைத் தன்ன
தருளொன் றினாலு மறிதற் கரிதாயக் 179

கரணங் கடந்தொளிருங் கண்ணைக் கயிலை
வரைமிசையின் முத்தி வழங்கும் பிரானைப் 180

பரிநெடுந் தேருகைத்தும் பாரதம்போர் பாரதத்தற்
கருள்சுரந்த வற்புதனை யன்று லினீழல் 181

உரையிறந்த உண்மை யுருவைத்தன செய்ய
கரமலராற் காட்டுங் கருணைக் கடலைக் 182

குருவுரு வாகவென் னுள்ளங் கொள்ள
மரைமருவு மரகதத்தை மண்ணிநதித் தென்பாற் 183

நாணிற் கரவந்த தம்பிரா னைத்தான்
பொருனை நதியிற் பொதியிற் பிறந்த 184

வரிய வியறுமளி யுண்டு தண்டேன்
முரலுமிசை யுமுகிற் கணங்கட் தம்மிற் 185

பொருது சொரியும் புனல்வழியே போந்து
தெருவுதொறும் உலவுத்தென் சேந்தை சேர்ந்த 186

குருமணியைக் கோவத்தைக் கோயிலாங் கொண்ட
வருமருந்தை யானைக்கா வாங்குவந்து தன்னைத் 187

தரவிருந்த தத்துவனைத் தாணல்லா மான
திருநடனஞ் செய்யச் சிவச்சுடரைச் செம்மை 188

யருளும் அமிர்தத்தை அன்னையினும் நல்ல
பெருமானை என்னையிங் ஙனம்பித்தேற் றிவிட்ட 189

சொரூபானந் தச்சுடரைத் தூயமறைகட் கெட்டாத
திருமேனி ஐம்புலனுந் தித்திக்க வாரிப் 190

பருகி யுருகும் பதமருளான் ஆகில்
அருவாம் உருவெழு தலாகாவென் றோதும் 191

ஒருநான் மறைபோல் உள்ளக் கிழியிற்
கருணா நிதியடியேன் கண்காண வந்தேன் 192

திருவான கோலமெலாந் தீட்டிதென் சேந்தை
மருவார் பொழிற்பெண்ணை மாமடலா நல்ல 193

பரிமா மடலமைத்துப் பல்கலையாற் றன்னைத்
தெரிவார் வையகத்துஞ் சிந்தையுளே யோகம் 194

புரிவர் குறைவிடத்தும் போற்று மடியார்
திருவீதி தோறுஞ் சிறியேனை ஆண்ட 195

பெரியோன் ஓர்பித்தன் பெருமப் பிறப்பும்
உருவுங் குண்ணும் உறவும் பிறவும் 196

அருவும் பதியும் வழியும் பழைய
கருவின் கணேயிலான் காயத்தை மாற்ற 197

உருவங் கொடுவருவான் உண்ண வளிக்கும்
பெருவஞ் சககள்வன் பெண்ணா ணலியென்று 198

ஒருதன்மை யனல்லன் ஒன்றலன் என்றிப்
பரிசெங்கும் உள்ள பழிதூற்றி என்றன் 199

சிரம்வந்த செந்தா மரைசிவப்ப வென்பால்
வருமெல் லையூர்வேன் மடல் 200

கண்ணு மண்ணுங் களிப்பக் கழலவித்த
வண்ண மிலாதான் வடிவெழுதி யெண்ணுகின்ற
தென்றிக்கே வானாக்குந் தேசிகன்வாழ் தென்சேந்தை
மன்றிக்கே ஊர்வேன் மடல்

கலிமடல் முற்றும்

சிவமயம்

சர்வஞ்சின்மயம்

அகம் — 101
அணைத்தல் — 40
அபயம் — 64
அமிர்தம் — 377
அமுது — 32
அயன் — 259
அரவம் — 41
அரன் — 407
அரி — 179
அரிமா — 281
அரியவுயிர் — 47
அரிவை — 101
அரு — 2
அருநான்மறை — 5
அருமறைகள் — 184
அருவினை — 193
அருவை — 215
அருனோகையம் —93
அருள் — 93
அன்னை — 337
அன்னைமார் — 101
அன்பர் — 116
ஆகமநூல் — 5
ஆகம் — 69
ஆடகம் — 103
ஆரப்பருகல் — 25
ஆரருள் — 139
ஆலிங்கனம் — 152
இயமானன் — 151
இரவிமண்டலம் —220

இரவு — 304
இருகைமலர் — 68
இருபத்து மூவர் — 219
இருவர் — 68
இருவினை — 66
இளநிலவு — 60
இன்கனி — 97
இன்பம் 11, 18 — 66
உச்சி — 67
உடம்பு — 81
உணராமை — 26
உண்மை — 26
உருகுநதி — 26
உருத்திரன் — 180
உருபு — 48
உருமம் — 223
உருவம் — 182
உரைகுழறல் — 45
உலகம் — 203
உன்மத்தம் — 95
எண்மர் — 75
எரி — 151
எல்லையூர் — 400
ஐம்புலன் — 25
ஒண்கமலம் — 74
ஒருகோடி — 106
ஒருவன் — 21
ஒளிமணி — 70
ஓதல் — 6
கண் — 29,85, 118

கண்ணீர் — 44, 51
கதிர்ச்செல்வன் — 150
கயிலை — 339
கரணம் — 168
கரணம் — 359
கரிய கடல் — 325
கரியநிறன் — 62
கரியுணவு — 97
கரு — 3,200
கருமம் — 177
கருணாநிதி — 250
கருணைக்கடல் —264
கவர்தல் — 29
கவலை — 239
கள்ளி — 101
கனி — 29
கன்னல் — 73
காக்கை — 31
காமசரிதை — 340
காமம் — 325
காயம் — 230
காய் — 29
காலம் — 73
கிரமாகிரமங்கள் — 263
கிரி — 322
கிலேசம் — 217
குமிழ் — 78
குரவன் — 42,100,106,253
குரு — 137
குருகூர் — 252

குருமணி — 373
குருவி — 234
குழாம் — 234
குழை — 78
குற்றம் — 78
கொம்பு — 312
கோமான் — 173
கோவுலகு — 55
சககோலம் — 42
சங்கு — 61
சசிமண்டலம் — 22
சடகோபன் — 252
சந்திரபாகம் — 87
சரிகுழல் — 91
சாயல் — 46
சார்ந்தவர் — 63
சாளரம் — 120
சிந்தை — 77
சிந்தை நோய் — 141, 195
சிரம் — 289
சிலை — 86
சிவச்சுடர் — 376
சிறியேன் — 390
சிறுதெய்வம் — 141
சீவன் — 199
சுடர் — 91
சூரர் — 38
சூழ்கலை — 45
செங்கமலை — 58
செங்கழுநீர் — 114

செம்பொன் — 58
செம்மை — 376
செவிமலர் — 80
செவ்வி — 52,80
செந்தமிழ் — 254
செழுநீர் — 111
சொரிதல் — 45
சொரூபானந்தச்
சுடர் — 379
தங்கை — 276
தத்துவன் — 375
தமிழ்க்குன்று — 304
தரு — 61
தருமம் — 9, 18
தலம் — 153
தலை — 270
தவமுடையார் — 69
தளிர் — 287
தாய் — 267
திரிபவர் — 34
திருநடனம் — 376
திருநாமம் — 286,296
திருநுதல் — 89
திருப்புருவம் — 86
திருமார்பு — 59,314
திருமால் — 272
திருமுறுவல் — 72
திருமேனி — 261
திருவடியார் — 108
திருவாசகம் — 246
திருவாபரணம் — 92

| | | | |
|---|---|---|---|
| திருவாய்மொழி | –254 | தென் சேந்தை | –385 |
| திருவானம் | – 80 | தென்புலத்தான் | – 173 |
| திருவீதி | – 111,390 | தேவாதிபர் | – 37 |
| திரை | – 316 | தேறல் | – 246 |
| தீ | – 30 | நஞ்சு | – 32 |
| தீவினை | – 269 | நட்டார் | –322 |
| துணை | –319 | நாண் | – 46 |
| துயர் | – 213 | நாண்மலர் | – 53 |
| துருவம் | – 67 | நாபி | – 228 |
| துறை | – 271 | நான்முகன் | – 272 |
| தூயமறை | – 38 | நிமித்தம் | – 132 |
| தெண்ணிலவு | – 117 | நிருபாதிகம் | –9 |
| தெண்முத்தம் | – 222 | நிலவு | – 57 |
| தெரிவை | – 40 | நிலன் | – 351 |
| தெரிவைமார் | – 277 | நூறாயிரம் | – 122 |

| | | | |
|---|---|---|---|
| நெஞ்சு | — 45 | பல்கலை | — 387 |
| நெடுந்தேர் | — 261 | பனிநீர் | — 110 |
| பகல் | — 304 | பாகாயம் | — 177 |
| பங்கயம் | — 85 | பாகு | — 73 |
| பதம் | — 381 | பாசடை | — 332 |
| பரங்கருணை | — 256 | பாதம் | — 72 |
| பரசக்தி | — 213 | பாரதம் | — 129, 261 |
| பரமன் | — 185 | பார் | — 191 |
| பரமானந்தம் | — 256 | பாவம் | — 39 |
| பரவின்பம் | — 25 | பாவி | — 39 |
| பரவுதல் | — 44 | பாவியேன் | — 44,96 |
| பரவை | — 203 | பாவை | — 195 |
| பரிசு | — 185 | பாழ் | — 268 |
| பரிவு | — 129 | பிஞ்சிற் பழுத்தவுரை | — 189 |
| பருதி | — 332 | பித்தன் | — 391 |


பித்து — 28
பிரமம் — 28
பிரமனிறை — 204
பிரான் — 169,360
புகழ் — 291
புண்ணியம் — 109
புத்தேள் — 273
புயம் — 710
புலம்புவோர் — 15
புனல் — 371
பூதர் — 323
பூம்பொழில் — 238
பெண் — 144
பெருநான்மறை — 75
பெருமாதவம் — 35
பெருமார்பு — 81
பெருமான் — 3,14,144
பெருமை — 22,335
பெருவான் — 1
பெருவேதனை — 146
பேதவுரு — 2
பேதையர் — 35
பேதை — 146
பேயேன் — 282
பேய் — 121
பொதி — 368
பொய்மை — 7
பொருணாடல் — 15
பொருணான்கு — 7
பொருள்கள் — 2

பொருனைநதி — 368
பொன் — 297
பொன்னுலகம் — 4
மகுட சூளாமணி —50
மடல் —326
மணிவாக்கு — 284
மண்ணகம் — 346
மது — 328
மரகதம் — 365
மலர்க்கண் — 165
மலர்ப்பாதம் — 298
மழைத்தடங்கண் — 124
மாதர் — 326
மாதிரங்கள் — 330
மானுடம் — 60
மான் — 30
மிருடிகள் — 141
முகில் — 90
முத்தநிரை — 71
முயல் — 31
முலை — 113
முல்லை — 305
முனி — 348
மூக்கு — 298
மெய்மை — 7
மெய்யின்பம் — 249
யாக்கை — 47
யானை — 374
யோகநெறி — 231
யோகம் — 205

வடுவுரை — 190
வஞ்சக கள்வன்—396
வஞ்ச நெஞ்சு — 264
வரியானை — 303
வருணன் — 174
வளவர் — 155
வளி — 151
வளைகழல் — 46
வள்ளல் — 238
வனம் — 287
வாக்கு — 160
வாதவூர் — 238
வானகம் — 346
வானோர் — 153
வான் — 151
விரதங்கள் — 347
விரதாதிகள் — 162
விரையார் — 30
விளக்கு — 30
விளையாடல் — 36
விழி — 87
வீடு — 12
வெண்களபம் — 112
வெண்டிங்கள் — 150
வெண்ணகம் — 60
வையம் — 72,287

# துணைநூற்பட்டியல்


| | | |
|---|---|---|
| நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் | — | சைவ சித்தாந்தக் கழகம் |
| இலக்கணத்தொகை யாப்புப் பாட்டியல் | — | ச.வே. சுப்பிரமணியன் |
| தமிழ் இலக்கியக் கொள்கை – 7 | — | ச.வே. சுப்பிரமணியன்<br>ர. விஜயலட்சுமி |
| சிற்றிலக்கியத் திறனாய்வு | — | ந.வீ. ஜெயராமன் |


P. 7116.